# 22

# திருவழிபாடு

கத்தோலிக்கராகிய நாம் அனைவரும் ஒன்று கூடி முழு உலகின் படைப் பாளராகிய இறைவனுக்குக் கிறிஸ்துவோடு தூய ஆவி வழியாக நிறைவேற்றும் அதி உன்னத ஆராதனை திருவழிபாடாகும்.

''இறை நடுநிலையாளர்'' என்ற சுற்றுமடலின் 20வது எண்ணில் திருத்தந்தை 12வது பயஸ் (பத்திநாதர்) திருவழிபாடு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> திருவழிபாடு கிறிஸ்துவின் குருத்துவ பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை கிறிஸ்துவினூடாக தந்தையாம் இறைவனுக்குச் செலுத்தும் அதிஉன்னத வழிபாடே திருவழிபாடாகும்.

கிறிஸ்துவின் மறையுடல் என்பது திருச்சபையாகும். தூய ஆவி வழியாக திருச்சபையின் தலை கிறிஸ்து ஆவார். திருமுழுக்குப் பெற்ற அனைவரும் அந்த உடலின் உறுப்புக்களாவர். இந்த உறுப்புக்கள் அனைவரும் தலையாகிய கிறிஸ்துவினால் வழிநடத்தப்படுகின்றனர். அவ்வாறே திருச்சபையின் உறுப்புக்களாகிய எம்மை தலையாகிய கிறிஸ்துவே தூய ஆவி வழியாக வழிநடத்துகிறார். இறைவனுக்கு ஏற்புடையவர்களாக எமது முழு வாழ்வையும் மாற்றிக்கொள்ள கிறிஸ்து எமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இரண்டாம் வத்திக்கான் சங்க 'திருவழிபாடு' பற்றிய கொள்கைத் திரட்டு எண் 7 இல் இவ்வாறு கூறுகிறது.

கிறிஸ்துவின் திருப்பணி சார்ந்த அலுவலை செயற்படுத்துவதே திருவழிபாடாகும். கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபை கிறிஸ்துவுக்குள் இறைதந்தைக்கு முழுமையாகவும் பகிரங்கமாகவும் செலுத்தும் ஆராதனையே திருவழிபாடாகும்.

இயேசுகிறிஸ்து தமது பணியின் உச்சமாக விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே கல்வாரியில் நிறைவேற்றிய முழுமையானதும் பகிரங்கமானதும் நிறைவானதுமான நிகழ்வு இறைவனுக்குச் செலுத்திய திருவழிபாடாகும். திருச்ச பையின் அங்கத்தவர்களாகிய நாமும் திருப்பலியினூடாக கிறிஸ்து வழியாக இறைதந்தைக்கு எமது வழிபாடுகளை ஒப்புக்கொடுக்கின்றோம்.

திருவழிபாட்டிற்கு ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் பதம் லிற்றேர்ஜி (liturgy) என்பதாகும். அது ‘லிற்றூர்ஜியா’ (leitourgia) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும். அது லாஓஸ் (laos), எர்கொன் (ergon) என்ற சொற்களினால் உருவாக்கப்பட்டதொன்றாகும்.

**லாஓஸ்** – மக்களைக் குறிக்கும் பதமாகும்.

**ஏர்கொன்** – வேதனமின்றிச் செய்யும் சேவை அல்லது தொழிலாகும்.

கிரேக்க சமூகத்தில் இவ்வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தங்கள் இருந்தன. அதாவது

- தங்கள் தலைவருக்கு வேதனமின்றி அடிமை வேலை செய்வதையும்
- தன் நண்பனுக்கு ஆற்றுகின்ற இரக்கச் செயலையும்
- சமூகத்தில் பிரபுக்களுக்கு ஆற்றுகின்ற அரசகரும செயல்களையும் குறித்து நிற்கின்றன.

ஆகவே கத்தோலிக்கராகிய நாமும் கிறிஸ்துவைப் போல பிறருக்காக எமது முழு வாழ்வையும் உடைத்துப் பகிர்ந்து திருவழிபாடாக மாற்றிக்கொள்ள முன்வருவோமாக.

எனவே நான்

- ✝ பங்கிலும் பாடசாலையிலும் உள்ள பக்திச் சபைகளில் இணைந்து துன்புறுவோருக்கு உதவுவேன்.
- ✝ பிறரின் துன்பங்கள் வேதனைகளின் போது அவர்களுக்கு உதவுவேன்.
- ✝ எனது வாழ்வின் இன்பங்களின்போது மட்டுமல்லாமல் பிறரின் இன்பங்களின் போதும் மகிழ்ச்சி அடைவேன்.
- ✝ பாடசாலையில் துன்புறுவோர் மீதும், ஒடுக்கப்பட்டோர் மீதும் இரக்கம் காட்டுவேன்.
- ✝ என்னிடம் உள்ளவற்றைப் பிறரோடு பகிர்ந்து கொள்வேன்.
- ✝ வழிபாட்டுக்கான முன் ஆயத்தங்களில் ஒத்துழைப்பேன்.

## செயற்பாடு

1. திருவழிபாடுக் கொள்கைத் திரட்டு எண் இன் படி திருவழிபாடு என்பதனை விளக்குக.
2. திருத்தந்தை 12வது பயஸ் (பத்திநாதர்) திருவழிபாடு பற்றி வெளியிட்ட சுற்றுமடலின் பெயர் என்ன?
3. ‘லிற்றூர்ஜியா’ என்ற சொல்லை உருவாக்கிய இரு சொற்களையும் தருக.
4. உமது அயலாருக்கு உதவிய சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

**வாழ்க்கைக்கு**

பிறருக்காகத் தியாக வாழ்வு வாழ்ந்து மகிழுங்கள்.